செய்தி வெளியீடு எண் :23 நாள் : 14.04.2018

***தேனி மாவட்டம்,***
***வேளாண்மை சார்ந்த திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து***
***வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்***
***திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள்***
***பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-***

தேனி மாவட்டம், பெரியகுளம், தேனி, போடிநாயக்கனூர், உத்தமபாளையம் ஆகிய பகுதிகளில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறை ஆகிய துறைகளின் சார்பில், வேளாண்மை சார்ந்த திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப.. அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாணவ, மாணவியர்களால் உலர் பூக்களைக் கொண்டு அமைக்கபட்டிருந்த கண்காட்சி, தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறையின் சார்பில் புதிய ரக பழங்களை கொண்டு உருவாக்கப்பட்ட பழக்கண்காட்சி, செடிகள், நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ள பகுதி, வேளாண் உற்பத்தி பொருட்களை சிப்பமிடும் இயந்திரம், தேனி-அல்லிநகரம் நகராட்சியில் வேளாண் வணிகத்துறையின் கீழ் ரூ.1.72 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய கட்டிடங்கள், தேனி வட்டத்திற்குட்பட்ட அரண்மனைப்புதூர் கிராமத்தில் தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் ரூ.17.80 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.8.90 இலட்சம் 50 சதவீத அரசு மானியத்தில் பசுமைக்குடில் அமைக்கப்பட்டு, அதில் பயிரிடப்பட்டுள்ள வெள்ளரிக்காய் மற்றும் கொத்தமல்லி சாகுபடி, ரூ.6.68 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.5.93 இலட்சம் 90 சதவீத அரசு மானியத்தில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின் சக்தியில் இயங்க கூடிய மின் மோட்டார் பம்பு செட், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட ஆணைமலையான்பட்டியில் தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் திராட்சை ஆராய்ச்சி நிலையம், திராட்சை சாகுபடி, திராட்சை நாற்றுகளின் உற்பத்தி முறை, சின்னமனூர் மற்றும் காமயகவுண்டன்பட்டியில் செயல்பட்டு வரும் வாழைக்காய் பதனிடும் தொழிற் சாலைகள் ஆகியவற்றை வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப.. அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், சின்னமனூர் பகுதிகளை சேர்ந்த விவசாயிகளிடம் அரசின் நலத்திட்ட உதவிகள், மழை அளவு, நிலத்தடி நீரினை பெருக்குதல், மண் வளத்தினை பாதுகாத்தல், தாவர வளத்தினை பெருக்குதல், தரிசு நிலங்களை மேம்படுத்தி விவசாய சாகுபடி நிலங்களாக மாற்றுதல், நிலமற்ற விவசாய கூலிகளுக்கு வாழ்வாதரங்களை உருவாக்குதல், நெல், சிறுதானியங்கள், பயிர் வகைகள், எண்ணெய்வித்து, பருத்தி, கரும்பு போன்ற வேளாண் பயிர்களும், வாசன பயிர்கள், மலைப்பயிர்கள், பழப்பயிர்கள், மலர் பயிர்கள், காய்கறிகள் பயிரிடுவது குறித்து வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் கலந்துரையாடினார்.

ஆய்விற்குப்பின் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழக அரசு பெருகி வரும் மக்கள் தொகையின் தேவைக்கேற்ப உணவு தானிய உற்பத்தியினை பெருக்குவதற்கு பல்வேறு வேளாண் சார்ந்த திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. கொய்யா நாற்றுகளை 7 அடியில் பயிரிடப்படுவதை 1.5 அடியில் பயிரிடுமாறும், கொடிக்காய்களை குறுகிய காலத்தில் உற்பத்தி செய்வது, தேனி மாவட்டத்தில் முக்கிய பயிரான திராட்சை மற்றும் வாழை சாகுபடியில் மேலும், அரசின் மூலம் தேவையான நலத்திட்ட உதவிகள் வழங்குவது தொடர்பாக விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்து வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு வேளாண் நிலத்தினை சமன் செய்தல், உழவிடுதல், நெல் நடவு செய்தல், கதிரடித்தல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளுக்கு அரசு நிர்ணயத்துள்ள குறைந்த கட்டணத்தில் இயந்திரங்கள் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. தோட்டக்கலைத்துறையின் மூலம் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் புதிய பரப்பு விரிவாக்கம், நுண்ணீர் பாசனம் திட்டம், தேனீ வளர்ப்புத்திட்டம், திசு வாழை வளர்ப்புத்திட்டம், பண்ணை கருவிகள் பவர் டிரில்லர் வழங்கும் திட்டங்கள் அரசு மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தமிழக அரசு கூட்டுப்பண்ணைத்திட்டத்தின் கீழ் ஒரே கிராமத்தில் தொகுப்பாக நிலமுள்ள ஒவ்வொரு விவசாயியும் பங்கேற்புத் தொகையாக குறைந்தபட்சம் ரூ.500/- செலுத்தி உறுப்பினருக்கான அங்கீகாரம் பெற்ற பின்னர், 20 சிறு, குறு விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு, விவசாய ஆர்வலர் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, வேளாண் பணிகளுக்கான இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதனைபோன்று அருகில் உள்ள 5 விவசாய ஆர்வலர் குழுக்களை இணைத்து, குறைந்தபட்சம் 100 சிறு, குறு விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு, உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கும் வேளாண்மை தொடர்பான பொதுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, ரூ.5 இலட்சம் மூலதன நிதியின் மூலம் இக்குழுவில் உள்ள சிறு, குறு விவசாய உறுப்பினர்கள் தங்களின் தேவைக்கேற்றவாறு, பல்வேறு வேளாண் இடுபொருட்களை வழங்கி வருகிறது. எனவே, விவசாயிகள் அரசின் திட்டங்களை நன்கு பயன்படுத்தி கொள்ளுமாறும், மேலும், வேளாண் சார்ந்த விவசாயிகளின் கோரிக்கைகள் அரசின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப.. அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.முகம்மது அப்துல் நசீர் அவர்கள், பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் சாமிநாதன் அவர்கள், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.கிஷோர்குமார் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்மு உதவியாளர் (வேளாண்மை) திரு.சந்திரசேகரன் அவர்கள், வேளாண்மைத்துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**